29th August 1970]

*Admission into Medical Colleges*

*49. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) whether there is any proposal to hold an entrance examination for students seeking admission into Medical Colleges in the State; and

(*b*) if so, the stage at which the matter now stands?

**மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்தல்**

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம் மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளில் இடம் கோரும் மாணவர்களுக்காக நுழைவுத் தேர்வு (Entrance Examination) நடத்தும் செயல்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில், இப்போது இது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU G. VASANTHA PAI: In view of the fact that so many applications are filed in the High Court attacking the scheme of admission to medical colleges, will the Government kindly consider whether it would not be proper and appropriate now at least to hold an entrance examination for admission to medical colleges?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்குகள் வேறு காரணங்களுக்காகத் தொடரப்பட்டிருக்கின்றன. 'என்ட்ரன்ஸ் எக்சாமிநேஷன்' வைக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப் பரிசீலித்து, ஏற்கெனவே இருக்கின்ற முறைகளையே கையாளலாம் என்ற முடிவுக்கு வந்ததன் காரணமாக, நுழைவுத் தேர்வினை வைக்கவில்லை. அப்படியே வைத்தாலும், அதன் மூலம் பல்வேறு நிலைமைகள் ஏற்படக்கூடும். அந்தத் தேர்வினை வைப்பதற்காக இடம் தேர்ந்தெடுக்கப்படுவதிலும், அதற்கான கேள்விகள் தயாரிப்பதிலும், இன்னும் பல வகைகளிலும் சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதற்காகத் தான் வீணான தகராறை ஏற்றுக் கொள்ள வேண்டாம், இருக்கின்ற முறையையே செம்மைப்படுத்தலாம் என்று சொல்லி, அம்முறையே கையாளப்பட்டு வருகிறது.

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவதில் நல்ல காரணம் இருக்கிறதென்றாலும்கூட, இப்படிப்பட்ட நேர்முகத் தேர்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கும்போது பல்வேறு விதமான புகார்கள் எழுகின்றன. அதைத் தவிர்க்க வேண்டியது பொது வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாசிவயமானது என்று கருது

கிறேன். இப்படிப்பட்ட பல்வேறு புகார்களும் குற்றச்சாட்டுகளும் வருவது, பொது வாழ்க்கைக்கு மிகுந்த இழுக்காக இருக்கிறது. ஆகவே நேர்முகத் தேர்வுகளில் தனிப்பட்ட குழுக்களை வைத்து மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக, பி.யூ.சி. பரிட்சையில் வாங்கிய மார்க்கை அடிப்படையாக வைத்தே அவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாதா, அல்லது தனித் தேர்வு அவசியம்தானா, என்பதை அரசு மீண்டும் பரிசீலிக்குமா ? பி.யூ.சி. பரிட்சையே ஒரு தேர்வாக இருக்கும் போது, மற்றொரு தேர்வு எதற்கு என்பதையும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : எந்த முறையைக் கையாண்டாலும் அந்த முறையிலும் குற்றம் குறை சொல்லுகிற அளவுக்குச் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. எனவே பி.யூ.சி. பரிட்சையில் பெற்ற மார்க்குகளையே வைத்துக்கொண்டு தேர்ந்தெடுப்பது என்று வைத்தால்கூட, அந்த மார்க்குகளெல்லாம் சரியான அடிப்படையில் வாங்கப்பட்டவை தானா என்ற கேள்வி எழும்புகிறது. அவர்கள் மார்க்கு வாங்கியதை மட்டும் வைத்துக்கொண்டு அவர்கள் அத்தனை பேரும் திறமைசாலிகள் என்று முடிவு கட்டிவிட முடியாது. இதையும் நாம் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு அவர்களுக்கு இருக்கிற 'ஆப்டிடியூட்' மற்றும் பல வகைகளில் கொண்டிருக்கிற திறமை, என்.சி.சி., கேம்ஸ், சோஷியல் சர்வீஸ் போன்றவைகளையும் கவனித்து, அப்படிப்பட்டவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, பி.யூ.சி. மார்க்கை மட்டும் வைத்துக்கொண்டு எடுத்துக்கொள்ள முடியாது. இப்படி எந்த முறையிலும் குறைபாடு இருக்கிறது. இந்தக் குறைபாடுகளை யெல்லாம் தவிர்க்க என்னென்ன முறைகளைக் கையாளலாம் என்று கண்டறிந்து, முடிந்த அளவிற்குக் குறைகளை நீக்கிவிடும் அளவுக்குத் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : எம்.பி.பி.எஸ். அட்மிஷனைப் பொறுத்த வரையில், நடைமுறையில் உள்ள முறை பொது மக்களுக்குப் பரவலாக அதிருப்தியை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. குறைந்த மார்க்கு வாங்கியவர்கள் அட்மிஷன் பெற்றுவிடுகிறார்கள். அதிகமான மார்க்கு வாங்கியவர்கள் தேர்வு பெறாமல் போகிற பல சங்கடங்களை நாம் காண முடிகிறது. ஆகவே, இந்த முறையை மாற்ற, புனராலோசனை செய்யவும் வேறு நல்ல திட்டம் கொண்டு வரவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் நல்ல வழியைச் சொல்வார்களானால், அது ஒரு சிறந்த வழியாகத் தோன்றினால், அதைச் செயல்படுத்தக்கூட அரசாங்கம் முயற்சி செய்யலாம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : இப்போது கோர்ட்டு மூலமாக எடுக்கும் நடவடிக்கைக்கும், தேர்வு முறைக்கும் சம்பந்தம் இல்லாவிட்டாலும்கூட இண்டியன் இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி போன்ற இடங்களில் 'என்ட்ரன்ஸ் எக்சாமிநேஷன்' வைத்து அதன் மூலமாக மாணவர்களைத் தேர்வு செய்வதில் பல சிக்கல்கள் தீர்க்கப்பட்டு நல்ல முறையில் தேர்வு நடப்பதாக எண்ணம் இருப்பதால், அந்த முறையைக் கையாள சர்க்கார் கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

29th August 1970]

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : பல்வேறு மாநிலங்களில் பல்வேறு முறைகளைக் கையாளுகிறார்கள். சில இடங்களில் எஸ்.எஸ்.எல்.சி., பி.யூ.சி., இன்னும் என்ட்ரன்ஸ் எக்சாமிநேஷன் ஆகிய மூன்று பரிட்சைகளிலும் பெற்ற மார்க்குகளைக் கணக்கிட்டுத் தேர்ந்தெடுக்கிறார்கள். 'ஜிப்மர்' என்ற பாண்டிச்சேரி கல்லூரியில், பி.யூ.சி. யோடு என்ட்ரன்ஸ் எக்சாமிநேஷனில் பெற்ற மார்க்குகளைக் கணக்குப் பார்த்துத் தேர்ந்தெடுக்கிறார்கள். வேறு சில இடங்களில் இந்த மூன்று மார்க்குகளோடு இண்டர்வியூவில் பெறுகிற மார்க்குகளையும் கணக்கில் கொண்டு சேர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இம்முறையே கையாளப்பட்டு வருகிறது என்பதன் அடிப்படையில் கூடுமான முறையில் இது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்ற நியாயமான தன்மையின் அடிப்படையில்தான் 100+100=200 மார்க்கு என்றும், இண்டர்வியூக்கு 75 மார்க்கு என்றும், ஆக மொத்தம் 275 மார்க்கு என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறோம்.

திரு. சி. வி. ராஜகோபால் : மருத்துவக் கல்லூரி தேர்வில், எப்படிப் பார்த்தாலும் ஒரு புனிதமான தன்மையில்லாமல், நிச்சயமாகக் குறைபாடுகள் உள்ளதாகவே இருக்கிறது என்று அமைச்சர் அவர்களும் இந்த அவையும் நன்றாக அறியும். இப்படி இருப்பதன் காரணமாக, மற்ற மாநிலங்களில் மெடிகல் காலேஜ் அட்மிஷனுக்கு என்று 'நன்கொடை'யாக ஒரு குறிப்பிட்ட தொகையை ரூ. 20,000 அல்லது ரூ. 25,000 என்று வாங்குவதுபோல், இங்கே ஒரு முறையைக் கையாள சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அங்கெல்லாம் தனியார் கல்லூரி வைத்து நடத்துவதால் அம்மாதிரியாக வாங்க முடிகிறது. இது அரசினர் கல்லூரியாக இருப்பதால், அப்படி வாங்குவதென்பது தவறாகும். அப்படியே வாங்குவது என்று ஆரம்பித்தாலும் கூட, அப்போதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுந்து அப்படி வாங்கலாமா என்றுதான் கேட்பார்கள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : முற்போக்குச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் என்று சில ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டாலும்கூட எழுத்து மூலமாகத் தேர்வு வைப்பது இப்போதுள்ள குறைகளை நிவர்த்தி செய்யாதா? எனவே அரசு அவ்வாறு தேர்வு செய்ய முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாணவர்கள் இப்போதே பி.யூ.சி. பரிட்சை எழுதிவிட்டுத்தானே வருகிறார்கள். அதை வைத்துக் கொண்டே தேர்வு நடத்தலாமே, மறுபடியும் ஒரு தேர்வு வேண்டுமா என்ற கருத்து வருகிறது. அதற்கு 50 மார்க்கும், இதற்கு 75 மார்க்கும் வாங்க வேண்டும். இரண்டையும் சேர்த்துப் பிறகு இண்டர்வியூவில் வாங்குவதையும் சேர்த்துப்

[29th August 1970

பார்க்கிற கட்டம் வரும். அதற்கு மேலும் ஒரு காரணம் சொல்லப் படுகிறது. மாணவர்கள் மூன்று பல்கலைக் கழகங்களிலிருந்தும் வருகிற காரணத்தால், என்ட்ரன்ஸ் எக்சாமிநேஷன் வைப்பது நல்லது என்று சொல்லுகிறார்கள். இதிலும் பல்வேறு சங்கடங்கள் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. அப்படியே பரிட்சை வைத்தாலும் வினாத்தாள் வெளி வந்துவிட்டது, அதைச் சொல்லி விட்டார்கள், மார்க்குப் போட்டு விட்டார்கள் என்றெல்லாம் வந்துவிடும். மேலும் அந்தப் பரிட்சையை யார் நடத்துவது என்றுகூட யோசித்தோம். டி.என்.பி.எஸ்.சியிடம் விடுவதா அல்லது மெடிகல் கவுன்சிலிடம் விடுவதா என்று கேள்வி வருகிறது. இப்படி எதிலும் குளறுபடிகள், சங்கடங்கள் எழும். எனவே அதிகமான சங்கடங்களை வளர்த்துக் கொள்ளாமல், இருக்கிற முறையைச் சீராக்கி, செம்மையாக்கி நடைமுறைப்படுத்த என்ன செய்யலாம் என்று யோசித்து வருகிறோம். தனிப்பட்ட முறையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சிறந்த வழிகளைச் சொன்னால், அரசாங்கம் அவைகளைப் பரிசிலனை செய்யத் தயாராக இருக்கிறது. தேவையானால் அடுத்த ஆண்டுக்குள் எதிர்க் கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு ஒரு சிறந்த முறையை வகுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன். இப்போதுகூட சிறந்த வகையான முறையைச் சொன்னால், ஏற்று நடத்த நான் தயாராக இருக்கிறேன். இப்போது இருக்கிற முறையே சங்கடம் குறைவாக, கடைப்பிடிக்க ஏற்றதாக இருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர்: இந்த ஆண்டு மெடிகல் காலேஜ் தேர்வு மாநில ரீதியில் நடக்காமல், கல்லூரிக்கு இத்தனை இடங்கள் என்று பிரித்துவிட்டிருக்கிறார்கள். அதனால் அந்தக் கல்லூரிக்குத்தான் மனு செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தியதால் மாணவர்களுக்கு ஏதாவது பாரபட்சமோ பாதகமோ ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். ஒரு கல்லூரியில் மிக அதிகமான ஸ்தானங்கள் இருந்து, அந்தக் கல்லூரி மனுச் செய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், அது மாணவர்களுக்குச் சாதகமாக இருக்கிறது. ஒரு கல்லூரிக்கு மிகக் குறைவாக ஸ்தானங்கள் ஒதுக்கி, அதற்கு அதிகமான மாணவர்களிடமிருந்து மனு வந்தால், அது அவர்களுக்குப் பாதகமாக இருக்கிறது. ஆகவே எல்லாக் கல்லூரிகளுக்கும் மாநில ரீதியில் கோளாறு இல்லாமல் கொண்டுவருவதுபற்றி அரசாங்கம் சிந்திக்குமா, இப்படிக் கல்லூரி கல்லூரியாகப் பிரிப்பது என்பது அரசாங்கத்திற்கே விரோதமாக இருக்கிறதா என்பதையும்பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன்: சென்ற ஆண்டு அனுபவத்தை வைத்துத்தான் இந்த ஆண்டு இந்த முறையைக் கொண்டு வந்தோம். மாநில ரீதியில் ஒரு குழு என்றில்லாமல், நான்கு குழுக்களைப் போட்டு அவர்கள் ஆங்காங்கே மாணவர்களை, தேர்வு நடத்தி மார்க்குப் போட்டு, தேர்ந்தெடுத்தார்கள். மார்க்குப் போடுவதில் சிலர் தாராளமாக இருப்பார்கள். தாராளமாக மார்க்குப் போட்டால், அவர்கள் பட்டியல் மேலே நிற்கும். கொஞ்சம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் சில ஆசிரியர்களுக்கு 35 மார்க்குக்குமேல் கொடுக்க மனம் வராது. சில ஆசிரியர்கள் 60, 70 மார்க்குக்கூட கொடுத்துவிடுவார்கள். இப்படி

29th August 1970]

60, 70 மார்க்குக் கொடுக்கிறவர்கள் ஒரு பக்கம். 30, 35 மார்க்குக் கொடுக்கிறவர்கள் ஒரு பக்கம் என்று இருந்தால், அதிகம் கொடுத்தவர்கள் மேலே வந்துவிடுகிருர்கள். குறைந்த மார்க்கு கொடுக்கப்பட்டவர்கள் கீழே போய்விடுகிருர்கள் என்ற சூழ்நிலே ஏற்படும். அந்தந்தக் கல்லூரிக்கு என்று தேர்ந்தெடுக்கப்படுகிறபோது ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் அவர்கள் விண்ணப்பிக்க வேண்டும் என்ற முறையில்லே. எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானுலும் விண்ணப்பித்துக் கொள்ளலாம் என்று இருக்கிற இடத்தில், வருகிற விண்ணப்பங்களேக் கூடுமான வரை அருகில் உள்ள கல்லூரிக்கு விண்ணப்பிப்பது நல்லது என்ற கருத்து கூறப்பட்டிருக்கிறது. பாதகம் ஏற்படுகிற சூழ்நிலே தான் இதன் மூலம் ஏற்படுகிறது.

THIRU G. VASANTHA PAI : On a point of order, Sir. Is this matter not *sub judice* and subject to a Writ Petition in the Supreme Court ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்தப் பிரச்னே இந்தியத் தலேமை நீதி மன்றத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது அரசாங்கத்தின் கொள்கையைப்பற்றிய விளக்கம்தான். நீதிமன்றத்தைப்பற்றி இங்கே எதுவும் சொல்லப்படவில்லே. இன்னின்ன காரணங்களால் அரசாங்கம் இப்படிப்பட்ட முடிவை எடுத்திருக்கிறது என்று தான் கூறியிருக்கிருர். இதில் ஒழுங்குப் பிரச்னே ஒன்றும் இல்லே. நீதிமன்றத் தீர்ப்பைப்பற்றியோ, நீதிமன்றத்தைப் பற்றியோ எதுவும் சொல்லப்படவில்லே. நீதிமன்றத்தின் தீர்ப்பில் கூட மாவட்ட வாரியாக ஒதுக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிருர்களே தவிர, 'ரீஜனல் பேசிஸ்' கூடாது என்று சொல்லவில்லே. 'ரீஜனல் பேசிஸ்' வைப்பதற்கான காரணத்தை நீங்கள் சொல்லலாம் என்று ஒரு கருத்துக்கூட சுப்ரீம் கோர்ட் டெசிஷனில் இருக்கிறது. அதை நாங்கள் பார்த்தோம். நம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் போன தடவை மதுரை கமிட்டி அதிகமான மார்க்குப் போட்டது, சென்னேக் கமிட்டி குறைவான மார்க்குப் போட்டது என்றெல்லாம் சுப்ரீம் கோர்ட்டில் கூட ஒரு குற்றச்சாட்டு வந்தது. மதுரைத் தலேவர்கள் வேறு மாதிரிக் கேட்டார்கள். சென்னேயில் உள்ளவர்கள் ஒரு மாதிரியாகக் கேட்டார்கள் என்று எல்லாம்கூடச் சொல்லப்பட்டது. எனவே இதைத் தவிர்க்கவும், கால தாமதத்தைப் போக்கவும் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதைத்தான் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிருர். தலேமை நீதிமன்றம் சொல்லுவதை நாங்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேம்.

THIRU G. VASANTHA PAI : Sir, my point was not that. The Hon. the Minister for Law seems to think that the subject-matter of the petition before the Supreme Court was on the question of marks allotted for the different regions. That is not so. The question before the Supreme Court is — and I think admission has been secured by some persons — that the division into four regional committees is *ultra vires*. That is the question.

[29th August 1970

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அதைத்தான் நான் என்னுடைய பதிலில் சொன்னேன். இப்போது இரண்டு 'ரிட்டுகள்' வந்திருக்கின்றன. அதில் பல கருத்துக்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. இது வரை எதை எதை எழுப்பி வந்தார்களோ அவைகளையேதான் மீண்டும் அவர்கள் இப்போதும் எழுப்பியிருக்கிறார்கள். 4 குழுக்கள் போட்டதே கூட தவறு என்று வாதாடப்பட்டது. ஸ்டேட்-வைஸ் பேசிஸில் 'செலக்ஷன்' செய்திருக்க வேண்டும். அப்படியில்லாமல் 4 குழுக்கள் போட்டதன் காரணமாக, ஒரு குழுவுக்கும் இன்னோர் குழுவுக்கும் 'கிரைடீரியா' வேறுபடுகிறது. அதன் தலைவர்கள்கூட வேறுபட்ட கருத்தின்படி மதிப்பெண்கள் கொடுக்கிறார்கள் என்ற பிரச்னை சென்ற ஆண்டேகூட எழுப்பப்பட்டது. அதற்குப் பரிகாரம் தேடும் வண்ணம் அங்கங்குள்ள மருத்துவக் கல்லூரிகளில் உடனடியாக முடிவெடுத்து காலதாமதத்தையும் தவிர்க்க வேண்டும் என்றுதான் அரசினர் இந்த முடிவெடுத்தார்கள். இதையும் இப்போது சுப்ரீம் கோர்ட்டில் ஆட்சேபித்திருக்கிறார்கள். அதையும் சந்திக்கத்தான் போகிறோம், வெற்றியும் பெறத்தான் போகிறோம்.

*THIRU A. R. DAMODARAN : Sir, may I bring to the attention of the Hon. the Minister for Education one genuine difficulty in regard to medical college admission ? The other Science Colleges open their term by the first week of July and about 8000 boys and girls who apply for medical college admission have to wait till the 31st July or till the 1st or 2nd August before they know whether they are admitted to the Medical Colleges or not. So, about 6,500 students are between the devil and the deep sea, not knowing whether they should join the B.Sc. Course or whether they should wait for the Medical College admission. In view of the genuine difficulties of the students, may I know from the Government whether it will be possible for them to finish all these admissions in time or in co-ordination with the other Science Colleges, so that these students may not be put to difficulties in not being able to get admission into any Science Course in any other College ?

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : சென்னைப் பல்கலைக் கழகம் கூடுமான வரை ஜூன் 1-ம் தேதி பி.யூ.சி. தேர்வுப் பட்டியலை அறிவிக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஜூன் 10ந்தேதி வாக்கில்தான் பட்டியலை வெளியிடுகிறது. எனவே ஜூன் 10-ந் தேதிக்குப் பிறகு விண்ணப்பிப்பதற்கு 10 நாள் கொடுக்க வேண்டியிருக்கிறது. பிறகு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலித்து, குழுவிடம் அனுப்ப 5, 6 நாள் ஆகிறது. இதனால் ஜூன் கடைசியில் தான் வெளியூருக்குச் செல்ல வேண்டியதாக, ஜூலை 20-ம் தேதி வரையிலும் இண்டர்வியூ நடக்கிறது. அதற்குப் பிறகு பட்டியல் போட வேண்டியிருக்கிறது. ஏனென்றால் அந்தக் கமிட்டி அப்போதே அறிக்கை கொடுத்து மறு நாளே பட்டியல் வெளியிடப்படுகிறது. இதை ஜூலையிலிருந்தே ஆரம்பித்துவிடுகிறோம். எவ்வளவுக்கெவ்வளவு பல்கலைக் கழகங்களிலிருந்து 'ரிசல்ட்' சீக்கிரமாக வெளிவருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இந்தப் பட்டியல் வெளியிடுவதையும் விரைவுபடுத்த முயற்சிக்கலாம்.

29th August 1970]

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : மெடிகல் காலேஜுக்கு விண்ணப்பிக்கும் பல மாணவர்கள், தங்களுக்கு அதில் இடம் கிடைக்காமல் போனால் என்ன செய்வது, பி.எஸ்ஸி. வகுப்பிலாவது இடம் கிடைக்க வேண்டுமே என்று அதற்கு மனுப்போட்டு இடம் பெற்று அதற்கான பணத்தையும் கட்டி, எல்லாம் முடிந்த பிறகு, அவர்கள் மெடிகல் காலேஜுக்கு 'செலக்‌ஷன்' ஆனால், இப்படி பி.எஸ்ஸி.க்குக் கட்டிய பணம் எல்லாம் அனாவசியமாக விரயமாகிறது. அப்படிப்பட்ட நிலையில் இருக்கிற மாணவர்களுக்கு ஏதாவது ஒரு விதி விலக்குக் கொடுத்தாவது அவர்கள் கட்டிய பணத்தைத் திரும்பக் கொடுப்பதற்கு வழிவகை செய்யுமா இந்த அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : இதைப்பற்றிப் பல்கலைக் கழகம்தான் கவனிக்க வேண்டும். அரசாங்கம் கவனம் செலுத்துவதற்கு இதிலொன்றுமில்லை.

திரு. எம். எத்திராஜுலு : மெடிகல் காலேஜ் அட்மிஷனைப் பொறுத்து, பல்வேறு சந்தேகங்கள் எழுகிற காரணத்தால்தான், இம் மாதிரியான கேள்விகள் கேட்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே மெடிகல் காலேஜ் அட்மிஷன் முடிந்த பிறகாவது, மெடிகல் கல்லூரிகளுக்குத் தேர்வு பெற்ற மாணவர்களின் மார்க்குப் பட்டியலையும், தேர்வு பெறாத மாணவர்களின் மார்க்குப் பட்டியலையும், இந்த அவையின் முன் வைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : உயர் நீதி மன்றத்திலேயேகூட அதைக் கேட்டுப் பார்த்தார்கள். அவர்களுக்கே அதை வைப்பதற்கு இல்லை என்று கூறிவிட்டார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இந்த ஆண்டு எம்.பி.பி.எஸ். தேர்வில் முஸ்லீம்கள் மிகக் குறைவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது. எனவே வருங்காலத்திலாவது இது போன்ற குறைபாடு ஏற்படாமல், குறைந்தபட்சம் இஸ்லாமியர்களுடைய ஜனத்தொகையின் விகிதாசார அளவுக்குச் சமமாக 'சீட்டுகள்' முஸ்லீம்களுக்குக் கிடைக்கும்படி வழி செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் வகையில் 16 சதவீத இடங்கள் தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு இருக்க வேண்டும் என்றும், 25 சதவீத இடங்கள் பிற்பட்டவர்களுக்கு இருக்க வேண்டுமென்றும், இவ்விரண்டு பகுதியினருக்கு மட்டும் பிரித்து ஒதுக்கித் தருகிற அடிப்படையில் நடக்கிறது. இஸ்லாமியர்களுக்கு என்றோ, கிருஸ்தவர்களுக்கு என்றோ தனியாக ஒதுக்குகிற நிலையில்லை. மற்றவர்கள் எல்லோரும் பொதுவாகத்தான் கணக்கிடப்படுகிறார்கள். ஆனாலும் இஸ்லாமியரில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் ''லப்பை முஸ்லிம்கள்'' பிற்பட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் ஒன்றாகக் கருதப்படுகிறார்கள். பிற்பட்ட வகுப்பினருக்கு என்று 25 சதவீத இடங்கள் மட்டும் ஒதுக்கினாலும்கூட, திறமை அடிப்படையில், மார்க்கு வாங்குவதன் அடிப்படையில் கணக்கிடும்போது, 45, 47 சதவீத இடங்களை அவர்கள் பெறுகிறார்கள்.